


சென்னையில் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வழிநெடுகிலும் உற்சாக வரவேற்பு அளித்த மக்கள் திரள்!

## தி.மு.க. அரசின் ஒப்பற்ற திட்டங்கள் தொடர வேண்டுமானால்!

# 'திராவிட மாடல்' ஆட்சி மீண்டும் மலர வேண்டும்!

### சென்னை – பிரச்சாரக் கூட்டங்களில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை,ஏப்.22 –**

**'தி.மு.க.வின் ஒப்பற்ற திட்டங்கள் தொடர வேண்டுமென்றால் மீண்டும் திராவிட மாடல் ஆட்சிதான் மலர வேண்டும்!**

**தமிழகத்தை வஞ்சித்து, அ.தி.மு.க. முகமூடி அணிந்து வரும் பா.ஜ.கவிற்கு தக்க பாடம் புகட்ட வேண்டும்!' என தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.**

**கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20-04-2026) திரு.வி.க. நகர், பெரம்பூர் உள்ளிட்ட ஆறு தொகுதிகளில் மேற்கொண்ட பரப்புரையில் ஆற்றிய உரை விவரம் :**

**எழும்பூர் :**
**முதல்வர் ஸ்டாலின் உரை :**

நம்முடைய திராவிட மாடல் 2.0 ஆட்சி வரும் மே நான்காம் தேதி மீண்டும் உருவாகப் போகிறது. அதில் எந்த சந்தேகமும் இல்லை.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளராக போட்டியிடும் வழக்கறிஞர் அருமைச் சகோதரர் தமிழன் பிரசன்னாவுக்கு, நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியை தேடித் தர வேண்டும். அதற்காகத்தான், நானும், டெல்லி முன்னாள் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலும் வந்திருக்கிறோம்.

அவரைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், அவர் ஒரு பெரிய போராளி. எந்த அச்சுறுத்தலுக்கும், மிரட்டலுக்கு அஞ்சாதவர். மோடியை எதிர்த்துப் போராடக் கூடியவர். ஃபாசிஸ பா.ஜ.க. ஆட்சியை எதிர்த்துத் தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பவர்.

**அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு பா.ஜ.க. தந்த அடக்கு முறைகள்!**

தொடர்ந்து இரண்டு முறை டெல்லி முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், மூன்றாவது முறையும் வந்திருக்க வேண்டும். ஆனால், அவரை முடக்க வேண்டும் என்பதற்காக, அவரின் வலது கரமாக இடதுகரமாக தளபதிகளாக இருந்த பல அமைச்சர்கள் மீது பொய் வழக்குகளைப் போட்டு கைது செய்து, ஆண்டு கணக்கில் சிறையில் அடைத்து வைத்தார்கள்.

அதற்குப் பிறகு தேர்தல் நெருங்க நெருங்க, நம்முடைய அரவிந்த் கெஜ்ரிவாலையும் ஊழல் செய்தார் என்று ஒரு பொய் வழக்கு போட்டு கைது செய்து சிறையில் அடைத்தார்கள். ஆனால் அந்த அவதூறான வழக்கில், எந்த ஆதாரமும் இல்லை; குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு வெளியானது. அதன் பின்னர் விடுதலை ஆகி வந்திருக்கிறார்.

இதற்கிடையில்தான், டெல்லியில் சட்டமன்றத் தேர்தலை நடத்தி, பா.ஜ.க. தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, துஷ்பிரயோகம் செய்து, பல தில்லு முல்லுகளை செய்து, அவரை மூன்றாவது முறையாக வர முடியாத அளவிற்கு தேர்தலை நடத்தி முடித்தார்கள்.

ஆனால், அதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப்படவில்லை. "என்னை எவ்வளவு முறை சிறையில் போட்டாலும்; எவ்வளவுதான் என்னை கொடுமைப்படுத்தினாலும்; தூக்கு கயிற்றில் ஏற்றினாலும், நான் கவலைப்பட மாட்டேன். உங்களை (பிரதமர் மோடி) எதிர்ப்பேன்; உங்களை எதிர்ப்பதுதான் என்னுடைய லட்சியம்; உங்கள் ஆட்சியை ஒழிப்பதுதான் என்னுடைய கோட்பாடு" என்று உறுதியோடு இருக்கக்கூடியவர்.

**டெல்லியில் பல சாதனை திட்டங்களைத் தந்தவர்!**

இன்னும் அவரைப் பற்றி பெருமையாக சொல்ல வேண்டும் என்றால், அவர் முதலமைச்சராக இருந்த நேரத்தில், டெல்லியில் பல்வேறு சாதனைகளை திட்டங்களை அங்கே உருவாக்கித் தந்தார்.

அதில் முக்கியமாக என்னைக் கவர்ந்தது, பள்ளிக்கூடங்களில் சிறப்பு வகுப்புகள். மாடல் ஸ்கூல் என்ற பெயரில், பல சிறப்பான திட்டங்களை - சாதனைகளைக் கொண்டு வந்தார்கள்.

நான் உடனடியாக இங்கிருக்கும் அதிகாரிகளிடமும், நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியோடும் கலந்து பேசி, அங்கு நடப்பது போன்று நம்முடைய தமிழ்நாட்டில் கொண்டு வர வேண்டும் என்று முடிவு செய்து, நேராக நாங்கள் டெல்லிக்குச் சென்றோம்.

அவர் எங்களுக்கு அதை எல்லாம் சுற்றிக் காண்பித்தார். எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் விவரமாக எடுத்துச் சொன்னார்.

அதற்குப் பிறகு, நம்முடைய தமிழ்நாட்டில், குறிப்பாக சென்னை மாநகராட்சியில் நூற்றுக்கணக்கான ஸ்மார்ட் வகுப்பறைகளை நாம் ஆரம்பித்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, மீண்டும் நாம்தான் ஆட்சிக்கு வரப் போகிறோம். நம்முடைய திராவிட மாடல் 2.0 ஆட்சியில், தமிழ்நாடு முழுவதும் உள்ள வகுப்பறைகளை, ஸ்மார்ட் வகுப்பறைகளாக மாற்றப் போகிறோம் என்பதை தேர்தல் வாக்குறுதியாக கொடுத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு புதுமைப் பெண் திட்டத்தில், உங்கள் வீட்டில் இருக்கும் பிள்ளைகள் கல்லூரிக்குச் செல்லும் போது, ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம் அல்லவா?, அதை ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப் போகிறோம். அதே போன்று, தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் வழங்கும் ஆயிரம் ரூபாயையும், ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப் போகிறோம்.

அதேபோன்று, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, இனி ஆயிரம் அல்ல, 2 ஆயிரம் ரூபாய்!

இன்னொன்று, 'இல்லத்தரசி' திட்டம். அதில் 8 ஆயிரம் ரூபாய்க்கு கூப்பன் வழங்கப் போகிறோம். அதில் என்ன பொருள் வாங்க வேண்டும் என்று இப்போதே பெண்கள் எல்லாம் டிஸ்கஸ் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அது முழுக்க முழுக்க பெண்களின் சாய்ஸ். இப்படி ஏராளமான திட்டங்களை அறிவித்திருக்கிறோம்.

**புதுமைப் பெண் திட்டத்தை வடசென்னையில் தொடங்கினோம்!**

இதை எதற்காக சொல்கிறேன் என்றால், புதுமைப்பெண் திட்டத்தை இந்த வடசென்னையில் முதன்முதலில் தொடங்கினோம். அதை அப்போதைய டெல்லி முதல்வராக இருந்த சகோதரர் அரவிந்த் கெஜ்ரிவால்தான் தொடங்கி வைத்தார். அந்தத் திட்டம் இப்போது சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இப்படி, அவருக்கும் நமக்குமான உறவு தொடர்ந்து கொண்டிருக்கிறது. அந்த தொடர்பின் காரணமாகத்தான், நான் பிரச்சாரத்திற்கு வர வேண்டும் என்று அழைத்தேன். அவ்வாறு அழைத்தவுடன் மறுப்பு சொல்லாமல் வந்திருக்கிறார். அவர்களை வருக! வருக! என்று வரவேற்கிறேன்.

**துறைமுகம் :**
**முதல்வர் ஸ்டாலின் உரை :**

எல்லோரும் நன்றாக இருக்கிறீர்களா? (மக்கள் : நல்லா இருக்கோம்!) நன்றி!

உங்களைத் தேடி வந்திருக்கிறேன். உங்களை நாடி வந்திருக்கிறேன். உங்களிடத்தில் ஒரு வேண்டுகோளை எடுத்து வைக்க வந்திருக்கிறேன். உதயசூரியனுக்கு நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும். நம்முடைய வேட்பாளர், நமது மாவட்டச் செயலாளர், திரு. சேகர்பாபு அவர்களை நீங்களெல்லாம் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

அவர் மாவட்டச் செயலாளர் என்பதால் ஆறு தொகுதிகளுக்கும் அவர்தான் கண்ட்ரோல். ஆறு தொகுதிகளுக்கு மாவட்டச் செயலாளர் மட்டுமல்ல, ஆறு தொகுதிகளின் எம்.எல்.ஏ.வும் அவர்தான். என்னுடைய கொளத்தூர் தொகுதியையும் சேர்த்துதான் சொல்கிறேன். ஏன் என்றால், அவர் தொகுதி மட்டுமல்ல. பக்கத்தில் இருக்கின்ற ஐந்து தொகுதிகளையும் அவர் சிறப்பாக கண்காணித்து, என்னென்ன குறைகள், என்னென்ன பிரச்சினைகள் என்பதையெல்லாம் சிந்தித்து அந்தப் பணிகளையெல்லாம் முறையாக செய்வார்.



தொடர்ச்சி 6–ஆம் பக்கம்